ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2303/29 - 2022 ඔක්තෝබර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.10.27

2303/29 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வாதார முகாமைத்துவ சேவைகள் நியதிச்சட்டம்**

**வடக்கு மாகாண மாகாண சபை**

வடக்கு மாகாணத்தின் ஆளுநராகிய ஜீவன் தியாகராஜா ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் 154C பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஆளுநருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மற்றும் குறித்த அரசியலமைப்பின் 154T பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பிரகடனம் மூலமும் ஜீவன் தியாகராஜா, வட மாகாண ஆளுநர் ஆகிய என்னால் 2022, ஒற்றோபர் 28 ஆம் திகதியில் இச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

**ஜீவன் தியாகராஜா,**
ஆளுநர்,
வடக்கு மாகாணம்

வடக்கு மாகாணசபை,
மாகாணசபை வளாகம்,
A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்,
2022, ஒற்றோபர் 27.

1A - PG 6021 — 08 (2022/10)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**வடக்கு மாகாண சபை**

வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகள் (LMS)

**வடக்கு மாகாணம்**

வடக்கு மாகாணத்தின் வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகள் திட்டத்தைத் தாபிப்பதற்கும் வாழ்வாதாரச் செயற்றிட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு நியதிச்சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடக்கு மாகாண சபையினாற் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் 154C பிரிவின் விதிகளின் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் மேற்படி அரசியலமைப்பின் 154T பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களாற் செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம் 24-03-1990 இல் வெளியிடப்பட்ட 602/27ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி வடக்கு மாகாண ஆளுநரான ஜீவன் தியாகராஜா அவர்கள் "வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகள்" (LMS) என்ற பெயரில் கீழ்க்குறிப்பிடப்படும் கட்டமைப்பு, அதிகாரம், கடமை மற்றும் செயற்பாடுகளைக் கொண்டு ஒரு நியதிச்சட்டத்தை வடக்கு மாகாணத்தில் நிறுவுகின்றார். இக்குறிப்பிட்ட நியதிச்சட்டம் அரச அதி விஷேட வர்த்தமானியில் 27 ஆம் திகதி ஒற்றோபர் மாதம் 2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது என்பதுடன் வடமாகாண ஆளுநர் எந்தத் திகதியன்று அது நடைமுறைக்கு வருவதற்கான அவரது சம்மதத்தை அளிக்கக்கூடுமோ அந்தத் திகதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

அமைவிடம்.

யாழ்ப்பாண மாவட்ட சபையில் அமைந்துள்ளது.

**பாகம் I**

குறிக்கோள்கள்.

1. குறிக்கோள்கள்

இதன்படி வடமாகாண நிர்வாகத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகள் நியதிச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாறு அமைதல் வேண்டும்:-

1.1 அத்தியாவசிய சேவைகளுக்கான வலையமைப்பு

1.2 உணவு வழங்கலை உறுதிப்படுத்தல்

1.3 வறுமையிலிருந்து வறியோரைப் பாதுகாத்தல்

1.4 அத்தியாவசிய தேவைகளை வழங்கல்

1.5 முறையான மற்றும் முறைசாரா சமூகக்குழுக்களின் அடிப்படையிலான உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல்

1.6 சிறிய முயற்சியாளர்களுக்கான முகாமைத்துவ சேவைகள்

1.7 பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஒதுக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார நிலைபேறு

1.8 ஏற்கனவே உள்ள திறன்களைக் கண்டறிதல்

**பாகம் II**

**2. வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளின் அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள்**

வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளின் அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள்.

2.1 வறியோரை வறுமையிலிருந்து விடுவித்தல், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் அவர்களின் உற்பத்தித்திறன்சார் மற்றும் வருமானமீட்டும் ஆற்றல்களை மேம்படுத்துதல்

2.2 அத்தியாவசிய சேவைகள் தொடர்பாகப் பயனுள்ள திட்டங்களின் ஊடாக வழங்கல் வலையமைப்பை உருவாக்கலும் அடிமட்டத்திலிருந்து திட்டமிடுதல் அணுகு முறைக்கு இணங்க அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி மாகாண வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தல்

2.3 குடும்பங்கள் மற்றும் சமூகக் குழுக்களுக்காகச் சந்தை மற்றும் விற்பனை வலையமைப்பை உருவாக்கல்

2.4 உணவு வழங்கலை உத்தரவாதப்படுத்தல்

2.5 பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஒதுக்கப்பட்ட மக்களின்சிறு முயற்சிகளுக்கான முகாமைத்துவச் சேவைகள்

2.6 சிறு முயற்சியாளர்களைச் சந்தையுடன் இணைத்தல்

2.7 ஏற்கனவே பெறப்பட்ட திறனுடையோரை தேசிய தொழிற் தகமைசார் சான்றினை அடைவதற்கு உதவி புரிதல்

2.8 வாழ்வாதாரச் செயற்பாடுகள் சார்பான முன்னேற்றத்தை விருத்தி செய்து இந்நியதிச்சட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதலும் அமுற்படுத்தலும்

2.9 நியதிச்சட்டத்தின் முறையான மற்றும் பயனுள்ள நிறைவேற்றுகைக்கு அவசியமான அல்லது உசிதமான வேறெல்லாக் காரியங்களையும் செய்தல்

### 3. முகாமைத்துவச் சபை

3.1 வாழ்வாதார முகாமைத்துவ சபையின் நிர்வாகம், முகாமைத்துவம், மற்றும் கட்டுப்பாடு, (இதனகத்துப் பின்னர் "முகாமைத்துவச் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைத்துவச் சபையினால் ஆளுகைச் செய்யப்படும் முகாமைத்துவச் சபை.

3.2 முகாமைத்துவப் பணிப்பாளர் இதற்குத் தலைமை வகிப்பார் (இதனகத்துப்பின்னர் "முகாமைத்துவப் பணிப்பாளர்" எனக் குறிப்பிடப்படுவார்)

3.3 வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகள் சபையின் நோக்கங்களை அடைவதற்குச் சபையானது முகாமைத்துவப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கும்

3.4 சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

3.4.1 முகாமைத்துவப் பணிப்பாளர்

3.4.2 வடமாகாண சபைக்கான கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (தலைமைப்பீடம்)

3.4.3 வடமாகாண சபையின் உள்ளூராட்சி செயலாளர்

3.4.4 வடமாகாணத் திறைசேரிக்கான பிரதிப்பிரதம செயலாளர்

3.4.5 வடமாகாண சபையின் முதலமைச்சரின் அமைச்சுச் செயலாளர்

3.4.6 விடயத்திற்குப் பொறுப்பான வடமாகாண சபையின் அமைச்சின் பிரதிநிதி ஒருவர்

3.4.7 வடமாகாண சபையின் விவசாய அமைச்சின் பிரதிநிதி ஒருவர்

3.4.8 வடமாகாண சபையின் கிராமியக் கைத்தொழில் மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர்

3.4.9 வடமாகாண சபையின் சமூகசேவைத்திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர்

3.4.10 வடமாகாண விவசாயிகள், மீனவர், மற்றும் கால்நடை வளர்ப்போர் போன்றோரின் மாவட்டப் பிரதிநிதிகள்

3.4.11 வடமாகாண கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் மாவட்டப் பிரதிநிதிகள்

3.4.12 ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலுமிருந்து ஒரு பிரதிநிதி. இதனகத்துப்பின்னர் ''நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்'' எனக்குறிப்பீடு செய்யப்படும்) 3.4.6, 3.4.7, 3.4.8 மற்றும் 3.4.9 பிரிவுகளின் கீழ்ப் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் அதற்குரிய திணைக்களத் தலைவர்களினால் பெயர் குறிப்பிடப்பட்டோராவர். 3.4.10. மற்றும் 3.4.12 இற் குறிப்பிடப்பட்டோர் மாவட்டக் கூட்டுறவுச் சபையினாற் பொருத்தமான வகையிற் பெயர் குறிப்பிடப்பட்டு அனுப்பப்படுபவராவர். 3.4.11 இல் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகள் திணைக்களத்தினாற் பதிவு செய்யப்பட்ட சங்கங்களாற் பெயர் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டோராவர்

முகாமைத்துவப் பணிப்பாளர் நியமனமும் அதிகாரங்களும்.

3.5 வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகள் (LMS) முகாமைத்துவப் பணிப்பாளர் (MD)வடமாகாண சபையில் காணப்படும் திணைக்கள ஆளணியில் இருந்து விடுவிக்கப்பட்டு கௌரவ வடமாகாண ஆளுநர் அவர்களால் நியமனம் செய்யப்படுவார்

3.6 வடமாகாண சபையின் அங்கீகாரத்துடன் ஆளுநரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் பணிப்பாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் தேவை ஏற்படின் அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகவும் பணிப்பாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்

3.7 பணிப்பாளர், சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பணிகளுள் அல்லது கடமைகளுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு இயலாதவராக இருக்கும்போதெல்லாம், ஆளுநரின் சம்மதத்துடன் சபை அத்தகைய வராமையின் போது அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு நிலையத்தின் வேறெவரேனும் சிரேஸ்ட அலுவலரை நியமிக்கலாம்.

3.8 முகாமைத்துவப் பணிப்பாளருக்குள்ள அதிகாரங்கள்

3.8.1 வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகளை நிர்வகித்தல்

3.8.2 அதன் நிலைபேறினை உறுதிப்படுத்தல்

3.8.3 வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களினதும் வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகளுக்கும் முகாமையாளராகப் பணிபுரிதல்

3.8.4 மாவட்ட வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளை மேற்பார்வை செய்தலும், கட்டுப்படுத்தலும் மற்றும் முகாமை செய்தலும்

நிறுவனக் கட்டமைப்பு.

3.9 நிறுவனக் கட்டமைப்பு

3.9.1 நிறுவனக் கட்டமைப்புக்கு முகாமைத்துவப் பணிப்பாளரே தலைவராவார்

3.9.2 முகாமைத்துவப் பணிப்பாளர் வடமாகாண கௌரவ ஆளுநரின் உடன்பாட்டுடன் பொருளியல், நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளை உடையவர்களை அவருக்குத் துணையான பதவி அணியினராக நியமிப்பார்.

உறுப்பினரின் பதவிக்காலம்.

3.10 நியமிக்கப்பட்டஉறுப்பினர் ஒருவர் இறப்பதனாலோ, பதவியிலிருந்து விலகினாலோ, அன்றேல் பதவியிலிருந்து அகற்றப்படுவதனாலோ அவரது பதவி முன்னரே வறிதாகினாலொழிய அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டு காலமொன்றிற்குப் பதவி வகிக்க வேண்டும்.

உறுப்பினரின் பதவி வெறிதாக்கல் மற்றும் வெறிதாகல்.

3.11 மாகாண ஆளுநரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவ் உறுப்பினரும் அவர்களாகவே பதவியிலிருந்து விலகினால் அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு ஆளுநரின் எழுத்து மூலமான அனுமதி பெறப்பட்ட பின்னரே அகற்ற முடியும்.

3.12 நியமனம் செய்யப்பட்ட எவரேனும் உறுப்பினர் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகுவதாயின் அப்பொருள்பட ஆளுநருக்கு முகவரியிட்டு எழுதப்பட்டுப் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் எந்நேரத்திலும் விலகலாம்.

3.13 மேலே 3.10, 3.11, 3.12, உபபிரிவுகளில் குறிப்பிடப்பட்ட எவ்வகையினாலும் உறுப்பினர் பதவி வறிதாகும் பட்சத்தில் கௌரவ ஆளுநர் மேலே குறிப்பிடப்பட்ட பந்தி 3ன் உப பிரிவுகள் 3.4.2 தொடக்கம் 3.4.12 வரையான ஏற்பாடுகளுக்கமைய அவரைப் பதிலீடு செய்வதற்கு வேறொருவரை உறுப்பினராகப் பெயர் குறித்து நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவர் எவ்வுறுப்பினரைப் பதிலீடு செய்கின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாது எஞ்சியுள்ள காலத்துக்குப்பதவி வகித்தல் வேண்டும். *உறுப்பினரின் பதில் நியமனம்.*

3.14 நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம், உடற் தகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து, அத்தகைய இயலாமைபற்றிக் கௌரவ வடமாகாண ஆளுநருக்கு எழுத்தில் அறிவிப்பது அவரது கடமையாதல் வேண்டும். *உறுப்பினரின் தற்காலிக கடமை ஒழுங்கு.*

3.15 அத்தகைய தகவலைப் பெற்றதற்கமையப் பந்நி 3ன் உப பிரிவுகள் 3.4.2 தொடக்கம் 3.4.12 வரையான ஏற்பாடுகளுக்களைக் கருத்திற் கொண்டு அவரினிடத்திற் செயலாற்றவென ஒருவகை கௌரவ ஆளுநர் நியமிக்கலாம்.

**4. வாழ்வாதார முகாமைத்துவச் சபையின் கூட்ட ஒழுங்கு முறைமை.**

4.1 சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். *சபையின் கூட்ட ஒழுங்கு முறைமை.*

4.2 தலைவராகிய முகாமைத்துவப் பணிப்பாளர் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தலைவர் வருகைதராத போது சமுகமளித்துள்ள உறுப்பினர்களினாற் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிவழியுறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

4.3 சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையானோரின் வாக்கின்மூலம் முடிவுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தலைவர் தமது சொந்த வாக்குடன் சேர்த்து மேலதிகமாக இறுதித் தீர்மானத்திற்குரிய வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

4.4 சபையின் கூட்டங்களையும், அத்தகைய கூட்டங்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பான நடவடிக்கை முறையைச் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

4.5 சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது சபையின் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கல் முடியாது. *சபையின் நடவடிக்கைகள், ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடியற்றதாக்க முடியாது.*

4.6 சபையுறுப்பினர்களுக்கு, மாகாண சபையின் அங்கீகாரத்துடன் ஆளுநரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**5. வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளின் நிதி ஏற்பாடுகள்.** *சபையுறுப்பினர்களுக்கான கொடுப்பனவு.*

5.1 வாழ்வாதார முகாமைத்துவ சேவைகள் தனக்கெனச் சொந்தமாக நிதியைக் கொண்டித்தல் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றில் இதற்கெனத்தனியான கணக்கொன்று பராமரிக்கப்படல்.

5.2 கீழே குறிப்பிடப்படும் வழிமுறைகளின் ஊடாக வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளுக்கான நிதி திரட்டப்படும்.

5.3.1 வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளுக்காகக் காலத்திற்குக் காலம் வடமாகாண சபையினால் நிதி ஏற்பாடு செய்யப்படல்.

5.3.2 தேசிய ரீதியிலும், சர்வதேசரீதியிலும் செயற்திட்ட அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களிலிருந்தும் பெறப்படும் நிதி.

5.3.3 வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளின் மானியக்கொடைகள் நன்கொடைகள் தொடர்பான விடயங்களுக்கு வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின்எழுத்துமூல முன்னனுமதியைப் பெறுதல்

5.3.4 ஏனைய வழிகளாற் பெறப்படும் நன்கொடைகளிலிருந்து பெறப்படும் பண உதவிகள்.

**6. நிதி முகாமைத்துவம்**

நிதி முகாமைத்துவம்.

6.1 நிதி தொடர்பான முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

6.2 நிதியானது வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளின் நடவடிக்கைகள் அதன் குறிக்கோள்களை அடைவதற்கான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவே பயன்படுத்தப்படும்

**7. சபை உறுப்பினராக இருப்பதற்கான தகைமையீனம்**

சபை உறுப்பின ராக இருப்பதற்கான தகைமையீனம்.

மூன்றாம் (03) பிரிவின் 3.4 ஆம் உட்பிரிவின் 3.4.2. முதல் 3.4.12 வரையான பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் சபை உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

7.1 அவர் பாராளுமன்றத்தின், அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினராக இருந்தால் அல்லது உறுப்பினராகப் பதவியேற்றால்.

7.2 அவர் இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடன் செலுத்த வகையற்றவராக அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருந்தால்.

7.3 அவர் இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்த சுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருந்தால்.

7.4 அவர் ஒழுக்கக்கேட்டை உட்படுத்துவதும் ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலத்துக்குமான மறியல் தண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்,

7.5 அவர், இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியல் தண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால் அல்லது

7.6 அவர், சபை உறுப்பினராகத் தமது பணிகளை நிறைவேற்றுவதால். நிறுவனத்தைப்

7.7 பங்கமானமுறையிற் பாதிக்கக் கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

## பாகம் III

**8. வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகளின் கணக்கீட்டுச் செயற்பாடுகள்**

கணக்கீட்டுச் செயற்பாடுகள்.

8.1 அங்கீகரிக்கப்பட்ட கணக்கு நடைமுறைகளின்படி கணக்கீட்டுப் புத்தகங்கள் பராமரிக்கப்படும்.

8.2 காசுக் கொடுப்பனவுகள் காசோலைகள் மூலம் செலுத்தப்படல் வேண்டும். மற்றும் கையொப்பமிடுபவரைச் சபை தீர்மானிக்கும்.

8.3 வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகளின் அனைத்து வருமானம் மற்றும் செலவுகளைப்

*8.4* பராமரிப்பதற்காகப் பொருத்தமான கணக்குகளைச் சபை ஏற்படுத்தும்.

*8.5* பெற்றுக்கொண்ட வருமானம் மற்றும் நிதிச் செலவீடுகளின் தொடர்ந்து வரும் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தை மாதம் 1ஆம் திகதியிலிருந்து மார்கழி 31 வரையிலான ஒவ்வொரு நிதி ஆண்டின் ஆரம்பத்திலும் தயாரிக்கப்பட்டுச் சபைக்கு மாச்சு 31ஆம் திகதிக்குப் பிந்தாது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**9. கணக்காய்வு**

*9.1* சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த கணக்காய்வாளர் ஒருவர் வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்காக வடமாகாணக் கூட்டுறவு ஆணையாளரால் ஆளுநரின் அனுமதியுடன் நியமித்தல் வேண்டும். கணக்காய்வு நடவடிக்கை.

*9.2* தகுதிவாய்ந்த கணக்காய்வாளர் விரைந்து செயற்படக்கூடியவராகவும் வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகளின் வருமானம் மற்றும் செலவு ஆகியவற்றின் நடவடிக்கைகளின் நிதி நிர்வாகத்தைக் கணக்காய்வுக் கொள்கைகளுக்கமைய மேற்கொண்டு வருடாந்த அறிக்கையைத் தனது சிபார்சு மற்றும் கருத்துக்களுடன் தயாரிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

*9.3* மேலே 9.2ல் கூறப்பட்டதற்கமையத் தகுதி வாய்ந்த கணக்காய்வாளரால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை அவரால் ஆளுநர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர், மாகாணத் திறைசேரிக்கும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

*9.4* அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளும் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் நிதிசார் விதியும் நிலையத்தின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*9.5* கணக்காய்வாளரின் ஊதியம் மற்றும் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகள் வாழ்வாதார முகாமைத்துவச் சேவைகளின் நிதியத்திலிருந்து வழங்கப்படல் வேண்டும்

## பாகம் IV

**10. பொது**

*10.1* பணிப்பாளர், ஒவ்வோர் ஆண்டிலும், முன்னைய ஆண்டு தொடர்பான செயற்பாடுகளின் விபரமான அறிக்கையொன்றைத் தயாரித்து ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆளுநருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். வருடாந்த அறிக்கை.

*10.2* இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக ஆளுநர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

*10.3* ஆளுநரால் ஆக்கப்பட்ட எல்லா ஒழுங்குவிதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*10.4* ஒழுங்குவிதி ஒழிக்கப்பட்டுவிட்டதாயின் அது கருதப்படவேண்டிய திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*10.5* வாழ்வாதார முகாமைத்துவ சேவைகள் இலஞ்சச் சட்டத்தின் (26ஆம் அத்தியாயமான) பொருளுக்கு உட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் அமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும். நிலையமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

*10.6* இந்நியதிச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது நிலையத்தின் எவரேனும் உறுப்பினரினால், அலுவலரினால் அல்லது சேவையாளரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக, வழக்கு அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது. வழக்குக்கெதிரான பாதுகாப்பு.

10.7 இந்நியதிச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் சபையின் பணிப்பின்பேரில் 3.4.2. முதல் 3.4.12. வரை குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எவரேனுமாளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் கூறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல். 10.8 இந்நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"ஆளுநர்" என்பது வடமாகாணத்தின் ஆளுநர்

"எழுத்திலான சட்டங்கள்" என்பது, ஏதேனும் சட்டம் மற்றும் துணைச் சட்டவாக்கம் என்று பொருளாகும் என்பதுடன், வடமாகாண சபையினால் ஆக்கப்பட்ட நியதிச்சட்டங்களையும் மற்றும் அவற்றை ஆக்குவதற்கு அல்லது வழங்குவதற்கு ஏதேனும் சட்டத்தின்கீழ் தத்துவம் அல்லது அதிகாரம் கொண்டுள்ள ஏதேனும் குழுவினால் அல்லது எவரேனும் ஆளினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட கட்டளைகளையும், பிரகடனங்களையும், விதிகளையும், துணைவிதிகளையும், ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கும்.

பொருத்தமற்ற நிலை ஏற்படும் விடயத்தில் தமிழ் உரை மேலோங்கி நிற்றல். 11. இந்நியதிச்சட்டத்தின் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் பொருத்தமற்ற நிலை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

EOG 10 - 0249/1

---

**2022ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, சுற்றுலாப் பணியகம் நியதிச் சட்டம்**
**வடக்கு மாகாண மாகாணசபை**

வடக்கு மாகாணத்தின் ஆளுநராகிய ஜீவன் தியாகராஜா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் 154C பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஆளுநருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மற்றும் குறித்த அரசியலமைப்பின் 154T பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பிரகடனம் மூலமும் ஜீவன் தியாகராஜா, வடக்கு மாகாண ஆளுநர் ஆகிய என்னால் 27 ஒற்றோபர் 2022 ஆம் திகதியில் இச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

**ஜீவன் தியாகராஜா,**
ஆளுநர்,
வடக்கு மாகாணம்.

வடக்கு மாகாணசபை,
மாகாணசபை வளாகம்,
A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்,
2022, ஒற்றோபர் 27.

**வடக்கு மாகாண மாகாணசபை**

சுற்றுலாப் பணியகம்

**வடக்கு மாகாணம்**

**வடக்கு மாகாணத்தின் சுற்றுலா தொடர்பான திட்டத்தைத் தாபிப்பதற்கும் சுற்றுலாச் செயற்றிட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு நியதிச்சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடக்கு மாகாணசபையினாற் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் 154C பிரிவின் விதிகளின் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் மேற்படி அரசியலமைப்பின் 154T பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களாற் செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம் 24-03- 1990 இல் வெளியிடப்பட்ட 602/27

இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி வடக்கு மாகாண ஆளுநரான ஜீவன் தியாகராஜா அவர்கள் "வடமாகாணதின் சுற்றுலாப் பணியகம்" என்ற பெயரில் கீழ்க்குறிப்பிடப்படும் கட்டமைப்பு, அதிகாரம், கடமை மற்றும் செயற்பாடுகளைக் கொண்டு ஒரு நியதிச்சட்டத்தை வடமாகாணத்தில் நிறுவுகின்றார். இக்குறிப்பிட்ட நியதிச்சட்டம் அரச அதி விஷேட வர்த்தமானியில் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதி வெளியிடப்பட்டது என்பதுடன் வடமாகாண ஆளுநர் எந்தத் திகதியன்று அது நடைமுறைக்கு வருவதற்கான அவரது சம்மதத்தை அளிக்கக்கூடுமோ அந்தத் திகதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**அமைவிடம்**

யாழ்ப்பாண மாவட்ட சபையில் அமைந்துள்ளது. அமைவிடம்.

### பகுதி I

வடமாகாணத்தின் சுற்றுலாப் பணியகத்தைத் தாபித்தல்

1. (1.i )இந்நியதிச் சட்டத்தின் நோக்கத்திற்காகத் தாபிக்கப்படும் பணியகம் "**வடமாகாணத்தின் சுற்றுலாப்பணியகம்**" (இதனகத்துப்பின்னர் "பணியகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) என அழைக்கப்படும். சுற்றுலாப் பணியகத்தின் தாபிதம்.

(1.ii) பணியகமானது இப்பிரிவினால் அதற்கெனக் குறிப்பிடப்பட்ட பெயரால் தொடர்ச்சியாக ஒரு நிரந்தர நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பொதுவான முத்திரையையும் கொண்டிருப்பதுடன் அத்தகைய பெயரில் வழக்கொன்றைத் தொடுக்கலாம் மற்றும் தொடுக்கவும் முடியும்.

2. **வடமாகாண சுற்றுலாப்பணியகத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும் :**

(2.i) சுற்றுலா தொடர்பான தேசியக் கொள்கையின்படி வடமாகாணத்தினுள் சுற்றுலாவை மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல். பணியகத்தின் குறிக்கோள்கள்.

(2.ii) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சுற்றுலா ஏற்பாட்டுச் சட்டத்தின்படி வடக்கு மாகாண சபையின் விடய எல்லைக்குட்பட்ட வகையில் நிலைத்து நிற்கக்கூடியதான போதியளவு கவர்ச்சிகரமானதும் மற்றும் திறமையானதுமான விருந்தோம்பல் தொழில்களை உள்ளடக்கியதான உல்லாசத்துறைச் சேவைகளை விருத்தி செய்தலும் மேம்படுத்தலும்.

(2.iii) இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாச் சங்கங்களின் ஒத்துழைப்புடன் வடக்கு மாகாணத்தினுள் வரைபடங்கள் மற்றும் உல்லாசத்துறை சம்பந்தமான ஏனைய விடயங்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரித்தலும் அத்தகைய தகவல்களை வெளியிடுதலும்.

(2.iv) சுற்றுலாத் தொழில் துறையின் மேம்பாட்டில் தனியார் அல்லது நபர்களின் அமைப்புக்களை அல்லது பொதுத்துறையினை மற்றும் வடமாகாணத்தினுள் அத்தகைய தொழிலுடன் தொடர்புடைய ஊக்குவிப்பு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை ஊக்குவித்தலும் ஒத்துழைப்பு வழங்கலும்.

(2.v) இலங்கையின் பொருளாதாரத்தில் விரிவாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான பங்களிப்பைப் பாதுகாப்பதற்காக சுற்றுலா மற்றும் போக்குவரத்துத் துறைகளை மேம்படுத்தலை நோக்கிச் செயற்படல்.

(2.vi) இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்காக 2005 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலாச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்டது.

(2.vii) வடமாகாணத்தை இலங்கை மற்றும் வெளிநாடு ஆகிய இரண்டிற்குமான சுற்றுலா மற்றும் பயண இலக்காக அபிவிருத்தி செய்வதற்காக.

(2.viii) நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் ஓய்வுத்துறையில் நாடு அல்லது வர்த்தக நிறுவனங்களுடன் நேரடியாகவோ பங்காளியாகவோ வருமானத்தை உருவாக்கும் வழிகளை விருத்தி செய்தல்.

3. (3.1) பணியகத்தின் விவகாரங்கள் முகாமைத்துவ சபையினால் நிர்வகிக்கப்படும் மற்றும் முகாமைத்துவம் செய்யப்படும். (இதனகத்துப் பின்னர் சபை எனக் குறிப்பீடு செய்யப்படும்) இது கீழ்வருவோரை உள்ளடக்கியிருக்கும். பணியகத்தின் முகாமைத்துவ சபை.

(3.i.i). பிரதிப் பிரதம செயலாளர்- நிதி, வடமாகாணம் ( பதவிவழியாக)

(3.i.ii) ஏனைய 5 அங்கத்தவர்கள். ( இதனகத்துப்பின்னர் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் எனக் குறிப்பீடு செய்யப்பவர்) கௌரவ ஆளுநரினால் (இதனகத்துப்பின்னர் ஆளுநர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) நியமிக்கப்படுவார். இவர்கள் ஒவ்வொருவரும் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்களாக இருப்பதுடன் சுற்றுலாத்றையில் தம்மை பிரபல்யமானவர்களாகக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3.ii) சுற்றுலாத்துறையில் தகைமையும் அனுபவமும் கொண்ட ஒருவரைப் பணியகத்தின் தலைவராக ஆளுநர் நியமிப்பார். அவரே முகாமைத்துவ சபைக்கும் தலைவராவார்.

(3.iii) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறப்பதனாலோ, பதவியிலிருந்து விலகினாலோ, அன்றேல் பதவியிலிருந்து அகற்றப்படுவதனாலோ அவரது பதவி முன்னரே வறிதாகினாலொழிய அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டு காலமொன்றிற்குப் பதவி வகிக்க வேண்டுமென்பதுடன் அவர் அகற்றப்பட்டிருந்தாலேயொழிய மீளநியமிக்கப்படுவதற்கான தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3.iv) ஆளுநர் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஏதேனும் அங்கத்தவரை அலுவலகத்திலிருந்து அகற்ற வேண்டியது உசிதமெனக் கருதினால் அதற்கான காரணங்களைக் குறிப்பிட்ட பின்னரே அகற்ற முடியும்.

(3.v) நியமனம் செய்யப்பட்ட எவரேனும் உறுப்பினர் தமது அலுவலகத்திலிருந்து எந்நேரத்திலும் விலகுவதாயின் அப்பொருள்பட ஆளுநருக்கு முகவரியிட்டு எழுதப்பட்டுப் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் எந்நேரத்திலும் விலகலாம்

(3.vi) ஏதேனும் நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவரது மரணம், இராஜினாமா, அல்லது பதவி நீக்கல் காரணமாக அலுவலகத்தில் வெற்றிடம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஆளுநர் இதன் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு அத்தகைய உறுப்பினருக்குப் பின் பதவி வகிப்பதற்காக வேறு ஒரு நபரை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஏதேனும் உறுப்பினர் அவர் எந்த அங்கத்தவருக்காகப் பதவி வகிக்கின்றாரோ அவரது முடிவுபெறாத அலுவலக பதவிக் காலம் வரை அலுவலகத்தில் இருத்தல் வேண்டும்.

(3.vii) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம், உடற் தகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து, அத்தகைய இயலாமைபற்றிக் கௌரவ ஆளுநருக்கு எழுத்தில் அறிவிப்பது அவரது கடமையாதல் வேண்டும். அத்தகைய தகவல் கிடைத்ததன்படி இதன் ஏற்பாடுகளுக்கமைய ஆளுநர் அவரது இடத்திற்கு பதிலாக வேறு ஒருவரை நியமிக்க முடியும்.

சுற்றுலாப் பணியக முகாமைத்துவ சபையின் கூட்ட ஒழுங்கு.

4. (4.i) சபையின் கூட்டத்திற்கான நிறைவு எண் 3 அங்கத்தவராவர்.

(4.ii) சபையின் தலைவர் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தலைவர் வருகைதராத போது சமுகமளித்துள்ள உறுப்பினர்களினாற் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிவழியுறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(4.iii).சபையின் ஏதேனும் கூட்டத்தில் தீர்மானத்திற்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தலைவர் தமது சொந்த வாக்குடன் சேர்த்து மேலதிகமாக இறுதித் தீர்மானத்திற்குரிய வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

(4.iv) இப்பிரிவின் மேற்படி ஏற்பாடுகளுக்கமைய, சபையின் கூட்டங்களையும், அத்தகைய கூட்டங்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பான நடவடிக்கை முறையைச் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

வெற்றிடம் காரணமாக சபையின் செயல், நடவடிக்கையைச் செல்லுபடி யற்றதாக்க முடியாது.

5. சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது சபையின் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கல் முடியாது.

6. மாகாண சபையின் அங்கீகாரத்துடன் கௌரவ ஆளுநரால் தீர்மானிக்கப்படும் முறையில் அத்தகைய ஓர் கொடுப்பனவு சபை உறுப்பினருக்கு வழங்கப்படல் வேண்டும். *சபையின் அங்கத்தவருக்கான கொடுப்பனவு.*

7. பிரிவு 3 இன் உபபிரிவின் (3.iii) முதல் (3.vi) வரை குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் சபை உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:- *சபையின் அங்கத்தவராக இருப்பதற்கான தகுதியீனம்.*

(7.i) அவர் பாராளுமன்றத்தின், அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினராக இருந்தால் அல்லது உறுப்பினராகப் பதவியேற்றால்.

(7.ii) அவர் இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடன் செலுத்த வகையற்றவராக அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருந்தால்.

(7.iii) அவர் இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்த சுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருந்தால்.

(7.iv) அவர் ஒழுக்கக்கேட்டை உட்படுத்துவதும் ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலத்துக்குமான மறியல் தண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்,

(7.v) அவர், இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியல் தண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால் அல்லது, (7.vi) அவர், சபை உறுப்பினராகத் தமது பணிகளை நிறைவேற்றுவதால். நிறுவனத்தைப் பங்கமான முறையிற் பாதிக்கக் கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

8. (8.i.) சபை காலத்துக்குக் காலம் முடிவு செய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் பாதுகாப்பில் இருத்தல் வேண்டும்.

(8.ii) சுற்றுலாப் பணியகத்தின் இலச்சினை, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம். *சுற்றுலாப் பணியகத்தின் இலச்சினை.*

(8.iii) பணியகத்தின் இலச்சினை, சபையின் வலுவளிப்புடனும் சபையின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலும் அன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாகியிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். (8.iv) பணியகத்தின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பணியகமானது பேணுதல் வேண்டும்.

9. சுற்றுலாப் பணியகத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள். *பணியகத்தின் அதிகாரங்கள், செற்பாடுகள் மற்றும் கடமைகள் கீழ்வருமாறு.*

(9.i.) 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் பிரிவு 2 இன் ஏற்பாடுகளின் கீழ்த்தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்தாலோசித்துச் செயற்படுவதற்கு

(9.ii) மாகாணத்தில் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், வருமானமீட்டல் மற்றும் சுற்றுலாவை அபிவிருத்தி செய்தல்.

(9.iii) இலங்கைச் சுற்றுலா அதிகார சபைக்கு உதவுவதற்காக சுற்றுலா நிறுவனங்களைச் செயற்படுத்தலும், சுற்றுலாச் சேவைகளை வழங்குதலும் மற்றும் சுற்றுலா நிறுவனங்களை நடத்துவோரின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலும் வடமாகாணத்தினுள் சுற்றுலாச் சேவைகளை வழங்குதலும்.

(9.iv) அசையும் அசையாச் சொத்துக்களைக் கையகப்படுத்தல், வைத்திருத்தல், குத்தகைக்கு எடுத்தல் வாடகைக்குப் பெறல் அடமானம் வைத்தல் அல்லது அப்புறப்படுத்தல

(9.v) பணியகத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு அவசியமான கற்கைகள், ஆய்வுகள், பயிற்சிகளை ஒருங்கிணைத்தலும், உதவுதலும் மற்றும் ஊக்குவித்தலும்.

(9.vi) மானியங்கள், அன்பளிப்புக்கள் அல்லது நன்கொடைகள் பணமாகவோ பொருளாகவோ பெறுவதற்குச் சபையானது பணியகத்திற்கு வழங்கப்படும் அத்தகைய அனைத்து வெளிநாட்டு மானியங்கள், அன்பளிப்புக்கள் அல்லது நன்கொடைகள் தொடர்பாக அரசின் வெளிநாட்டு மூலவளத்திணைக்களத்தின் எழுத்து மூலமான முன் அனுமதியைப் பெறுதல் வேண்டும்.

(9.vii) பணியகத்தின் நோக்கத்தினை மேம்படுத்த அவசியமான ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கு.

(9.viii) பணியகத்தின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான அலுவலர் மற்றும் பணியாளர்களை நியமனம் செய்தல், பணிக்கமர்த்தல், பணியிலிருந்து இடைநிறுத்தல், அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டப்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பணிநீக்கம் செய்தல் போன்றவற்றிற்காகவும் மற்றும்

(9.ix) பணியகத்தின் நோக்கங்களைச் சரியாகவும் விளைதிறனாகவும் செயற்படுத்துவதற்கு அல்லது தேவையான அனைத்து ஏனைய விடயங்களையும் நிறைவேற்ற.

## பகுதி II

### பணியகத்தின் அலுவலர்கள்

10. (10.i) பணியகத்தின் பணிப்பாளராக இருப்பதற்குப் பொருத்தமான மற்றும் தகுதியான ஒருவர் சபையின் உடன்பாட்டுடன் ஆளுநரால் ஆட்சேர்ப்பு விதிமுறைகள் ஊடாக நியமிக்கப்படுவார்.

(10.ii) பணிப்பாளர் சபையின் அனைத்துக் கூட்டங்களிலும் சமூகமளிக்கவும் அத்தகைய கூட்டங்களில் பேசவும் உரிமையுடையவர். ஆயினும் அத்தகைய கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை அவருக்கில்லை.

(10.iii) பணியகத்தின் அலுவலர் மற்றும் பணியாளர்களின் நிர்வாகக்கட்டுப்பாடு உட்பட அனைத்து விவகாரங்களின் நடத்துகைக்குப் பொறுப்பாகவும் சபையின் தலைவரது பொதுவான வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு அதற்கமையப் பொறுப்பேற்றல் வேண்டும்.

(10.iv) மாகாண சபையின் அனுமதியுடன் ஆளுநரால் தீர்மானிக்கப்படும் ஊதியம் பணிப்பாளருக்கு வழங்கப்படும்.

(10.v) ஆளுநர் சபையின் உடன்பாட்டுடன் மற்றும் அதற்கென ஒதுக்கப்பட்ட காரணங்களுக்காக உப பிரிவு (10.i) அன் கீழ் நியமனம் செய்யப்பட்ட பணிப்பாளரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

(10.vi) பணிப்பாளர் சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் தனது செயற்பாடுகள் அல்லது கடமைகளை நிறைவேற்ற முடியாது அல்லது ஆற்றமுடியாது போனால் ஆளுநர் சபையின் உடன்பாட்டுடன் பணியகத்தின் வேறு ஒரு முதுநிலை அலுவலரை அவரது வெற்றிட காலத்தில் அவருக்குப்பதிலாக அவ்விடத்திற்குச் செயற்பட நியமிக்க முடியும்.

11. (11.i) இச்சட்டத்தின் கீழ் திறமையான செயற்பாடு, அதன் அதிகாரங்களை நிறைவேற்றுதல் மற்றும் செயற்படுத்துதல், செயற்பாடுகள் மற்றும் கடமைகளைத் திறமையாகச் செயற்படுத்தல் அவசியமெனக் கருதினால் சபை அத்தகைய அலுவலரையும், பணியாளரையும் நியமிக்கலாம் உபபிரிவு. (10.i) இன்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர் மற்றும் ஏனைய பணியாளருக்குச் சபையினால் நிர்ணயிக்கப்படும் அத்தகைய வகையில் ஊதியம் வழங்கப்படல் வேண்டும். அத்துடன் அத்தகைய கொடுப்பனவுகள் சேவை நிபந்தனைகளுக்கு அமைவானதாகவும் இருத்தல் வேண்டும்.

12. சபையின் கோரிக்கையின் பேரில் பொதுச் சேவையிலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தரும் சுற்றுலா என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுடன் வடமாகாண ஆளுநரால் மாகாண ஆளணியிலிருந்து சபையின் தீர்மானப்படி குறிப்பிட்ட காலத்திற்குப் பணியக உத்தியோகத்தர்களை நியமிக்கலாம்.

## பகுதி III

### நிதி

13. (13.i) பணியகம் அதற்கெனச் சொந்தமாக நிதியைக் கொண்டிருக்கும். (13.ii) அத்தகைய நிதியிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

(13.ii.i) பணியகத்தின் உபயோகத்திற்காக வடமாகாண சபையினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் அத்தகைய அனைத்து பணத்தொகையும்.

(13.ii.ii) அரசினால் வழங்கப்படும் அத்தகைய அனைத்துப் பணத்தொகையும்.

(13.ii.iii) மானியம், நன்கொடை மற்றும் அன்பளிப்புப் போன்ற அனைத்து வகையிலும் பெறப்படும் தொகைகளும் மற்றும்,

(13.iii) பின்வருவனவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட அத்தகைய தொகைகள் அனைத்தும்:

(13.iii.i) ஏதேனும் சுற்றுலா தொடர்பான சேவைகளைத் தனிப்பட்டோர் /நிறுவனங்கள் தாபிப்பது தொடர்பான ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக.

(13.iii.ii) சுற்றுலா இலக்குகளைத் தாபிப்பதில் உள்ளூராட்சி அதிகாரங்களுக்கு வழங்கப்படும் ஆலோசனைச் சேவைகளுக்காக.

(13.iii.iii). சுற்றுலா தொடர்பான ஆவணங்களைப் பிரசுரிப்பதற்கு. (வழிகாட்டிப் புத்தகங்கள், பிரசுரங்கள், வீடியோ விளக்கக்காட்சிகள் போன்றவை)

(13.iii.iv) பெறுமதிசேர் நினைவுப் பொருட்கள் /மறக்கமுடியாத பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக.

(13.iv) ஏனைய அனைத்துத் தொகைகள் அல்லாது இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தினால் பணியகத்தின் வரவிற்குத் திரட்டப்படும் நிதி

(13.v) பணியகம் அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளைச் செயற்படுத்தல், நிறைவேற்றல் மற்றும் செயல்திறன் ஆகியவற்றிற்கு ஏற்படும் செலவுகளை எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் அனைத்து அத்தகைய பணத்தொகையும் நிதியிலிருந்து செலுத்தப்படும்.

14. பணியகத்தின் நிதி ஆண்டு நாள்காட்டி ( கலண்டர்) ஆண்டாக அமையும்.

15. (15.i) பணியகத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு மற்றும் ஏனைய அனைத்து கொடுக்கல்வாங்கல் தொடர்பான முறையான கணக்குப் புத்தகங்களைச் சபை வைத்திருத்தல் வேண்டும்.

(15.ii) 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 23(1) மற்றும் 23(2) இன் ஏற்பாடுகளை இது தொடர்பாகப் பயன்படுத்த முடியும். மற்றும் வடமாகாணச் சுற்றுலாப் பணியகத்தின் கணக்குகள் இலங்கை ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆவது பிரிவின்படி கணக்காய்வாளர் நாயகத்தினால் அல்லது கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தகுதியுடைய கணக்காய்வாளரால் வருடந்தோறும் கணக்காய்வு செய்யப்படும்.

## பகுதி IV

### பொது

16. பணிப்பாளர் ஏதேனும் செயற்பாடு, அல்லது அவருக்குக் கையளிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட கடமையை அவசியம் செய்தல் வேண்டுமெனக் கருதும் சந்தர்ப்பத்தில் சபையின் அனுமதியுடன் பணியகத்தின் வேறு அலுவலருக்குக் கையளிக்கலாம். அத்தகைய அலுவலர் பணிப்பாளரின் வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாடுகளுக்கமைய அத்தகைய கடமைகளை நிறைவேற்றல் மற்றும் செயற்படுத்தல் வேண்டும். பணிப்பாளர் தனது செயற்பாடுகளைக் கையளித்தல்முடியும்.

வருடாந்த அறிக்கை.

17. (17.i) பணிப்பாளர் நீண்ட காலத் திட்டத்திற்கு அமைவாக அடுத்துவரும் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதுடன் ஒவ்வொரு ஆண்டின் பங்குனி மாதத்தின் 31 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ சபையிடமும் ஆளுநரிடமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(17.ii) பணிப்பாளர் கடந்த ஆண்டு தொடர்பான நடவடிக்கைகளின் விபரமான அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் தயாரித்து பங்குனி 31 அன்றோ அதற்கு முன்னரோ கௌரவ ஆளுநருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(17.iii) கௌரவ ஆளுநர் அத்தகைய அறிக்கையைப் பெற்று 3 மாதங்களுக்குள் மாகாண சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அமைச்சரின் வழிகாட்டல்.

18. இந்நியதிச்சட்டத்தின் கீழ் செயற்றிறன், அதிகாரத்தை நிறைவேற்றல் செயற்பாடுகள் மற்றும் கடமைகளை சபை தொடர்பாகக் காலத்திற்குக்காலம் ஆளுநரால் வழங்கப்படும் பொதுவான அல்லது சிறப்பான வழிகாட்டல்களுக்கமையச் சபைநிறைவேற்றல் வேண்டும். இத்தகைய வழிகாட்டல்களுக்கு இணங்குதல் சபையின் கடமையாதலும் வேண்டும்.

சபையின் அனைத்து உறுப்பினரும் பொது அலுவலராகக் கருதப்படுவர்.

19. சபையின் அனைத்து உறுப்பினர்கள், பணியகத்தின் அலுவலர்கள், பணியாளர் மற்றும் முகவர்கள் தண்டனைச் சட்டக் கோவையின் அத்தியாயம் 19 இன் நோக்கத்திற்காகவும் மற்றும் இக்கருத்திலும் பொது அலுவலராகக் கருதப்படுவர்.

பணியகம் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் காணப்படும்.

20. பணியகமானது இலஞ்ச ஊழல் சட்டத்தில் (அத்தியாயம் 26) அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படும். அதற்கமைய அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கட்டமைக்கப்படும்.

நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு.

21. எந்நடவடிக்கைக்காகவும் வழக்குத் தொடர முடியாது -

(20.i) இச்சட்டத்தின் கீழ் பணியகத்தினால் அதன் நன்மைக்காகச் செய்யப்பட்ட அல்லது செய்யப்படும் எந்த நடவடிக்கைக்கும் பணியகத்திற்கு எதிராக அல்லது

(20.ii) இந்நியதிச் சட்டத்தின்கீழ் அல்லது சபையின் வழிகாட்டலின் பேரில் நிலையத்தின் எவரேனும் உறுப்பினரினால், அலுவலரினால் அல்லது சேவையாளரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக,

(20.iii) இந்நியதிச் சட்டத்தின்கீழ் சபையின் வழிகாட்டலின் பேரில் உபபிரிவு (20.i) இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எவரேனுமாளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் கூறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

22. இச்சட்டத்தின் கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் நோக்கத்திற்காக அல்லது விளைவை ஏற்படுத்துவதற்காக ஆளுநர் ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தலாம்.

(22.i) மேலே குறிப்பிடப்பட்டபடி செய்யப்பட்ட ஒவ்வொரு ஒழுங்கு விதியும் ஆளுநரால் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படவேண்டும் என்பதுடன் அப்பிரசுரிக்கப்பட்ட திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும் அல்லது அவ் ஒழுங்கு விதியில் குறிப்பிடப்பட்ட பிந்நிய திகதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்

2005 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்கச் சுற்றுலாச் சட்டத்தின் ஏற்பாடு மாற்றியமைக்கப் படும்.

23. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் 2005 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலாச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டிற்கு முரணாக அமைந்தால் 2005 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்கச் சுற்றுலாச் சட்டத்தின் ஏற்பாடு மாற்றியமைக்கப்படும்.

முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்

24. இந்நியதிச்சட்டத்தின் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

EOG 10 - 0249/1

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.